# நல்ல மேய்ப்பன்

PV. Jesudas

இந்த உலகத்திலே யார் ஞானி? என்று கிரேக்கர்கள் கேட்கிறார்கள். ஒரு மனிதனை ஞானி என்று ஏற்று கொள்ள வேண்டுமென்றால் அவன் மூன்று கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும்.

**முதல் கேள்வி:** நாம் எங்கிருந்து வருகிறோம் ?

**இரண்டாம் கேள்வி:** நாம் இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறோம் ?

**மூன்றாம் கேள்வி:** நாம் எங்கே போகிறோம் ?

இந்த கேள்விகளுக்கு யார் வேண்டுமானாலும் மேலோட்டமாக பதில் சொல்லிவிடலாம். ஆனால் உள்ளத்தின் ஆழத்தில் இந்த கேள்விகளுக்கு, உலக மக்கள் பதில் சொல்லமுடிவதில்லை. இந்த மூன்று கேள்விகளுக்கும் வேதம் மட்டுமே பதில் சொல்ல முடியும்!

உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும், உண்ணவும் உடுக்கவும் மட்டுமா பிறக்கிறான்? இதற்காகவா தேவன் நம்மை படைத்தார்? எங்கே போகபோகிறோம் என்று அநேகருக்கு தெரிவதில்லை.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! மனிதன் இந்த உலகத்தில் வாழ்வதும் இறப்பதும் புரியாத புதிராகவே இருக்கிறது. திருமறை, மனிதனைப் பற்றி ஏராளமான இடத்தில் பேசுகிறது. மனிதனை பல்வேறு காரியங்களுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறது. மனிதன் மண்ணாயிருக்கிறான் என்று ஆண்டவர் சொல்லுகிறார். வேதத்திலே அநேக இடத்தில் மனிதன் மண்ணாயிருக்கிறான் என்று சொல்லப்படுகிறது.

**பின்னும் கூப்பிட்டுச் சொல்லென்று ஒரு சத்தம் உண்டாயிற்று; என்னத்தைக் கூப்பிட்டுச் சொல்வேனென்றேன். அதற்கு: மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலவும் இருக்கிறது.** -ஏசாயா 40:6.

இங்கு வேதம் மனிதனை புல்லுக்கு ஒப்பிட்டு பேசுகிறது.



**மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறதுபோலவே இவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப்பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; எல்லாம் மாயையே.**-பிரசங்கி 3:19.

இங்கு வேதம் மனிதனை மிருகத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறது.ஆண்டவர் மனிதனை நிழலுக்கும் ஒப்பிட்டு பேசுகிறார். இப்படியாக ஆண்டவர் மனிதனை அநேக காரியங்களுக்கு ஒப்பிட்டு பேசினாலும், தனிப்பட்ட முறையில் மனிதனுக்கு பொருந்தும்வகையில் இன்னொரு வசனத்திலும் சொல்லுகிறார்.

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்.** -சங்கீதம் 23:1.

இங்கு அவர் நம்முடைய மேய்ப்பராயிருக்கிறார் என்றால் நாம் அவருடைய ஆடுகளாய் இருக்கிறோம் என்று அர்த்தமாகிறது.

**கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும் அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.** -சங்கீதம் 100:3.

**அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.** -சங்கீதம் 95:7.

**என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.** எசேக்கியேல் 34:31.

இந்த வசனங்கள் யாவும் மனிதர்களாகிய நாம் ஆடுகளுக்கு ஒப்பாயிருக்கிறோம் என்று கூறுகிறது.

### ஏன் கடவுள் நம்மை ஆடுகளுக்கு ஒப்பிட்டு பேசுகிறார் ?

அதில் பல இரகசியங்கள் அடங்கியிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இணையாக இருக்கவேண்டும் என்றால் ஆடுகளை பற்றி நாம் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

நான் ஆடுகளை பற்றி அதிகமாக ஆராய்ச்சி செய்திருக்கிறேன். எங்கள் ஊரிலே எங்கள் குடும்பம் யாவரும் விவசாயக் குடும்பம். நான் ஒரு சிறு கிராமத்திலே பிறந்தவன். என்னுடைய தாத்தாவுக்கு சுமார் இரண்டாயிரம் ஆடுகள் இருந்தது. அந்த ஆடுகளை நாங்கள் ஓட்டிக்கொண்டு மேய்ப்பது எங்களது வழக்கமாயிருந்தது.

பத்து பதினைந்து நாட்கள் மலையிலே தங்கி ஆடுகளை மேய்த்து வந்தோம். ஆகவே ஆடுகளைப் பற்றி நான் நன்றாய் அறிவேன். ஆண்டவர் நம்மை ஆடுகள் என்று அழைக்கும்போது அது செம்மறியாடுகளை குறிக்கிறது. ஆண்டவரும் நமக்காக செம்மறியாடாகதான் பலியானார்.



**இந்த செம்மறியாட்டின் இரகசியம் என்ன?**

ஆடுகளிலே வெள்ளாடு என்றும், செம்மறியாடு என்றும் இருக் கிறது. இந்த செம்மறியாட்டிற்கு நான்கு குணாதிசயங்கள் இருக்கிறது. செம்மறியாடு புத்தியில்லாத ஆடாயிருக்கிறது. அதன் கண்களை நாம் பார்த்தோமென்றால் பேந்தையாக விழிக்கும்.



ஆண்டவர் படைப்பினிலே மிருகங்களில் இந்த ஆடுதான் புத்தியீ னமான மிருகம்.



இங்கு நமக்கு எழும்பும் ஒரு பெரிய கேள்வி, நாம் என்ன ஆடுகளை போல புத்தியீனம் உள்ளவர்களா? பிறகு ஏன் ஆண்டவர் நம்மை ஆட்டுக்கு ஒப்பிட்டு கூறுகிறார்?
நாம் எவ்வளவோ படித்திருக்கிறோம், நம்மில் நிறையபேர் அறிவாளிகளாக இருக்கிறோம். இப்படியிருக்க நம்மை ஆடுகள் என்று ஆண்டவர் சொல்லுகிறாரே, இது சரிதானா?
இரண்டு கேள்விகளை நான் உங்களுக்கு முன்னதாக வைக்கிறேன்.

## 1. நமக்கு என்ன தெரியும் ?

நான் கூட்டம் நடத்தும்போது அங்கு வருகிறவர்களை பற்றி எனக்கு என்ன தெரியும்? யார்எப்படி? என்று எனக்கு என்ன தெரியும் ? ஒருவர் அவர் மனதில் என்ன நினைக்கிறார் என்பதை நான் எப்படி அறிவேன் ?
ஒரு பாமரன் ரயில்வே ஷ்டேஷனுக்கு போய் என் மாமியாருக்கு ஒரு டிக்கட் கொடுங்கள் என்றான். டிக்கட் கொடுப்பவர், உன் மாமியார் ஊர் எது? என்று கேட்டபோது அவனுக்கு ஆச்சரியம். என்ன? எந்த ஊரா ? என்னய்யா பெரிய படிப்பு படித்திருக்கிறீர்கள், என் மாமியார் ஊர் எது என்று உங்களுக்கு தெரியாதா ? என்று கேட்டான்.
கர்த்தருக்குள் பிரியமானவர்களே !
நான் எங்கேயாவது கூட்டம் நடத்தபோனால், பஸ் நிலையத் திலிருந்து பத்து பேரையாவது விசாரித்துதான் அந்த கூட்டம் நடக்கின்ற இடத்திற்கு போய்சேருவேன்.
உலகத்திலே **3600** பாஷைகள் இருக்கிறது. அவைகள் யாவும் நமக்கு தெரியுமா? உலகத்தில் எத்தனையோ விஷயங்கள் இருக்கிறது, அவைகள் யாவும் நமக்கு தெரியுமா?

## 2. நமக்கு எவ்வளவு தெரியும் ?

நான் எவ்வளவோ சரித்திர புத்தகத்தை படித்திருக்கிறேன். அதற்காக நான் எல்லாவற்றையும் படித்துவிட்டேன் என்று நான் சொன்னால் நம்பும்படியாக இருக்குமா? தமிழர்களாகிய நமக்கு தமிழ்நாட்டு முழு சரித்திரத்தையும் தெரியுமா? நமக்கு எல்லாமே தெரியும் என்று நாம் நினைக்கிறோமே தவிர கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் அதிகம் என்பது நமக்கு தெரிவதில்லை.

கற்றது கைமண் அளவு கள்ளாதது உலகளவு என்பதுதான் ஒவ்வொரு மனிதனின் நிலை. கற்கக்கூடியது கடலளவாக இருப்ப தனால் கைமண் அளவு கற்ற நாம் பெரிய அறிவாளியா? புத்தி சாலியா?

மனிதர்களாகிய நாம் ஆடுகளைப் போல மதியீனமாக இருக்கிறோம். எங்கே போகிறோம்? எங்கே நிற்கிறோம்? என்ன செய்கிறோம்? என்பதை நாம் அறிவதில்லை. கஷ்டம் வந்தால் நிலை குலைந்துபோகிறோம். துன்பம் வந்தால் துவண்டுபோகி றோம். மேட்டிமையான கண்கள் நம்மை பெறுமைக்குள் அழைத்துச்செல்கிறது. நாம் ஆடுகளைபோல இருக்கிறோம். அதற்கு அறிவு கிடையாது, அது எங்கே போகிறது என்று அதற்கேதெரியாது. எங்கே படுத்துக்கொள்ளவேண்டும் என்றும் தெரியாது. அதற்கு மேய்ப்பன்தேவை. புள்ளுள்ள இடத்திற்கு நடத்தி செல்லவேண்டும். அப்பொழுது அது புள்ளைமேயும். அது புத்தி யில்லாத ஆடு. நாமும் அப்படியே இருக்கிறோம். நமக்கு எல்லாமே தெரியும், நாம் செய்வதுதான் சரியானது என்று நாம் நினைப்பது தவறு. இந்த ஆடுகளை போல இருக்கிற நமக்கு ஒரு மேய்ப்பன் தேவைப்படுகிறது. அந்த மேய்ப்பன்தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஆண்டவரின் ஒத்தாசை இல்லையென்றால் நாம் ஒன்று மில்லாமல் போய்விடுவோம். அவர் நமக்கு மேய்ப்பனாக இருக்க வேண்டும்.



**தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்.**



**அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை.**
**-சங். 14: 1.**

கடவுள் இல்லை என்று மதிகெட்டவன்தான் சொல்லு வான். வெளியில் கடவுள் இருக்கிறார் என்று சொல்லிகொண்டு உள்ளத்தில் கடவுள் இல்லை என்று சொல்லிக்கொள்கிறோம். வெளியில் சாட்சியோடு கடவுள் இருக்கிறார் என்று பிரசங்கம் செய்கிறோம். அவருடைய கட்டளைகளுக்கு பயந்து நடக்காமல் கடவுள் இல்லை என்று நம் இருதயத்தில் சொல்லிக்கொள்ளு கிறோம்.

**மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்; ஆலோச னைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன். -நீதி. 12: 15.**

நான் செய்வதுதான் சரி, நான் பேசுவதுதான் சரி என்று மனிதன் சொல்லும்போது அவன் மதியீனன் என்று வேதம் சொல்லுகிறது.

**மதிகேடரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ? -லூாக்கா 11: 40.**

வெளிப்புறத்தை சுத்தமாக வைக்கிற கர்த்தருடைய பிள்ளைகள் உட்புறத்தை பற்றி கவலைப்படுகிறதில்லை. மனதுக் குள்ளே பாவத்தை வைத்துகொண்டு வெளியே சுத்தமாக இருக்கிறோம். நாம் யாவரும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்று வேதம் கூறுகிறது. கல்லறைக்கு வெளியே வெள்ளை யடித்து பூக்கள் வைத்து அழகாக ஜோடிக்கப்பட்டிருக்கும்.



ஆனால் உள்ளே எலும்பும் புழுவும் பூச்சியுமாக இருக்கும். நாமும் அப்படியே அநேகர் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாக இருக்கிறோம்.

**தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்.** -லூக்கா 12:20.

களஞ்சியத்தை கட்டி நன்றாய் சேர்த்து வைத்தான். ஆனால் கர்த்தரோ மதிகேடனே! உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இன்று இராத்தரி எடுத்துக்கொள்ளப்படும்போது, நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்? பரலோகத்திற்கு செல்ல நாம் சேர்த்து வைத்தது என்ன? மேய்ப்பன் நம்மை நடத்தாவிட்டால் நாம் எங்கேபோவோம்? நம் நிலமையும் என்னவாகும்? ஆகவே இந்த பாவ உலகத்தின் மத்தியிலே நமக்கு மேய்ப்பன் தேவைப்படுகிறது. ஆடுகளாகிய நம்மை விழுங்க சாத்தான் காத்துக்கொண்டிருக்கிறான்.

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.** -சங். 32:8.

தம்மை நம்புகிறவர்களை அவர் விட்டுவிடுகிறதில்லை.

**இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது: பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே.** -ஏசாயா 48:17.

ஆட்டுக்கு இருக்கும் இன்னொரு குணாதிசயம் என்ன என்று பார்ப்போம்.

**நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.** -ஏசாயா 53.

ஆடுகள் தலை குனிந்து நடந்து போகையில் திடிரென்று ஏதாவது ஒரு ஆடு தலைதூக்கி பார்க்கும். அது என்ன பார்க்கிறது என்பது நமக்கு தெரியாது. அது தலையை தூக்கி பார்த்துவிட்டு, எல்லா ஆடுகளும் ஒரு வழியாக போகையில் அது மட்டும் தனியாக இன்னொரு வழியாகபோகும்.

உடனே அந்த ஆட்டை பின்பற்றி இன்னும் இருபது ஆடுகள் பின்தொடர்ந்து போகும். அவைகளை திரும்ப கஷ்டப்பட்டு கொண்டுவந்து மந்தைகளில் சேர்க்கப்போனால் இன்னொரு ஆடு வேறு பக்கம் பார்க்கும். இப்படியாக அவைகள் வழி தப்பி போய்கொண்டேயிருக்கும்.



நாம் யாவரும் ஆடுகளை போல வழி தப்பி போகிறோம். ஆண்டவர் நமக்கு வழிகளை காட்டுகிறார், நாமோ ஆடுகளைப் போல வழி தப்பிப்போகிறோம். எது நல்ல வழி? என்றும் எந்த பாதையில் நாம் செல்லவேண்டும்? என்றும் நமக்கு ஆண்டவர் நன்றாய் உணர்த்துகிறார், ஆனால் நாம் கேட்பதாக இல்லை. ஆடுகளை போல தலைதூக்கி பார்த்து வேறு வழியாக போகிறோம்.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! சாத்தான் நம்மை நேர் வழியாய் செல்லவிடுவதில்லை. நாம் நேராக போகும் பாதையில் சென்றாலும், வழியில் நிறைய பாதைகள் பிரிந்துகிடக்கிறது. எந்த பாதை எங்கே கொண்டுபோய்விடும் என்று நாம் அறியோம்.

நோவா மனந்திரும்புதலை குறித்து நூற்றிருபது வருடமாக பிரசங்கம் செய்தான். இரட்சிக்கப்பட்டவர்களோ எட்டு பேர் மாத்திரமே!

**பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து;** -2 பேதுரு 2:5.

அக்காலத்திலே இன்றைவிட ஜனபெருக்கம் மிக அதிகமாக இருந்திறக்கிறது. அத்தனை கூட்டத்திலும் எட்டுபேர் மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள். ஆதாமுக்கு ஐம்பத்தாரு பிள்ளைகள் என்று யூதர்கள் சொல்லுகிறார்கள். அதில் முப்பத்துமூன்று ஆண்களும் இருபத்து மூன்று பெண்களும் பிறந்தார்கள். இப்படியாக ஜனப்பெறுக்கம் அதிகமாக இருந்தது.

நாம் யாவரும் ஒரே வேதாகமத்தைதான் வைத்திருக்கிறோம். அதில் கூறப்பட்டதுபோல ஒரே தேவன் ஒரே சபை என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனால் நாமோ இன்று பல சபைகளாக பிரிந்திருக்கிறோம். பிசாசானவன் அநேக கள்ளத்தனமான வழிகளை மக்கள் மத்தியிலே உண்டாக்கியிருக்கிறான். சிதறியிருக்கிற ஆடுகளாகிய நமக்கு, மேய்ப்பன் தேவை என்று நாம் உணரவேண்டும்.

**அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.** -யோவான் 14:6.

கர்த்தராகிய இயேசுவே நமக்கு மேய்ப்பன், அவரே நமக்கு வழியாகயிருக்கிறார்.

கேட்டுக்கு போகிற வாசல் அதிக விசாலமுமாயிருக்கிறது. அதில் உள்ளாசமாகவும் சந்தோஷமாகவும் ஒரு குறைவில்லாதபடி ஏராளமானபேர் அதில் போய்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது நித்திய ஜீவனை கொடுக்ககூடிய வழியில்லை. ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமான வாசல். அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலரே!

**அவர்களை விட்டு விடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்றார். -மத்தேயு 15: 14.**

இந்த மார்க்க ரீதியிலே ஏராளமான பேர் தோன்றி யிருக்கிறார்கள். கண்மூடித்தனமாக பிரசங்கம் செய்கிறார்கள். இதை நோக்கி ஒரு பெரிய கூட்டமே நகர்ந்து போய்கொண்டிருக்கிறது.

**ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்,** எபேசியர் 4. 5

இப்படி வசனம் சொல்லும்போது நாம் ஏன் பல பிரிவுகளாக பிரிந்திருக்கிறோம்?

**கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கிய வான்கள். -**சங்கீதம் 119: 1.

இங்கு கூறப்பட்டதுபோல கிறிஸ்தவ மார்க்கத்திலேயே உத்தம மார்க்கம் என்று ஒன்று உண்டு. அந்த உண்மையான சத்தியமான மார்க்கம் என்ன? எந்த மார்க்கம் உண்மையான சத்தியத்தை சொல்லுகிறது? என்று நாம் ஆராய்ந்துபார்க்க வேண்டும்.

**நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். -**ஏசாயா 30: 21.

பரிசுத்த ஆவியானவர் நாம் ஜெபத்தோடு வேதத்தை வாசிக்கும்போது, இதுதான் வழி என்பதை நமக்கு சுட்டி காட்டுவார். சாத்தான் நமக்கு பலவிதமான வழிகளை ஏற்படுத்தி வைத்தாலும் மனிதர்களை அவனுடைய தந்திரமான செயல்களிலும் திட்டங்களிலும் குழப்பத்திலுமிருந்து தப்பித்துக்கொள்ள தேவ ஆவியானவர் நமக்கு வழி இதுவே என்று வேதவசனத்தினால் நம்மை எச்சரித்துக்கொண்டேயிருக்கிறார்.

சிலர் ஆண்டவர் என்னோடு பேசினார் என்று சொல்லு கிறார்கள். ஆண்டவர் மனிதரல்ல, அவர் நம்மிடம் வந்து அடிக்கடி பேச நாம் மோசேயைப் போல அவருடைய தாசனாய் பரிசுத்தமாய் இருக்கிறோமா? ஆகவே அப்படிப்பட்டவர்களை நாம் அவர்கள் கனிகளாலே அறிந்து, அவர்கள் யாரிடம் பேசுகிறார்கள் என்பதை புரிந்துக் கொள்ளலாம்.



**வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்லவழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ: நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.**

-எரேமியா 6: 16.

பூர்வ பாதை எது என்று நாம் விசாரிக்கவேண்டும். அப்பொழுது ஆண்டவர் எது வழி? என்று காட்டுவார்.

அடுத்து, செம்மறியாடுகளுக்கு தூரப்பார்வை கிடையாது. கிட்டே யுள்ளது மட்டுமே தெரியும். துள்ளிக்கொண்டே ஓடி பள்ளம் வந்தால் அதில் விழுந்துவிடும். இதற்காகவே ஆடு பேய்ப்பவன் கவனமாக அவைகளை பார்த்துகொள்வான். நமக்கு என்ன பார்வை இருக்கிறது? கிட்டப்பார்வையா? அல்லது தூர பார்வையா? ஆனால் நமக்கு தெரிவதெல்லாம் கிட்ட பார்வைதான்.

இன்று நாம் சந்தோஷமாக இருக்கிறோம், இன்று நாம் நினைத்ததை சாதிக்கிறோம், இன்று நாம் செய்வது சரிதான், என்று இருந்துகொண்டு தூரத்தில் நாளைக்கு நடக்கபோகிற காரியங்களை குறித்து கவலைப்படாமல் இருக்கிறோம். இனி வரபோவதென்ன? ஆண்டவர் நமக்காக என்ன ஆயத்தத்தை செய்து வைத்திருக்கிறார்? அந்த பரலோக ராஜியத்திற்கு நாம் போகவேணடாமா? இதோ நான் வருவேன், வந்து உங்களை என்னோடு அழைத்துச் செல்வேன் என்ற வாக்குகளை நாம் கவனிக்கவேண்டாமா?

**தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்; வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான். -**நீதி. 29: 18.

தீர்க்கதரிசனம் என்ற சொல், தூரத்து பார்வையை குறிக்கிறது. இன்று உலகத்தில் நடக்கின்ற காரியங்கள் அனைத் தையும் தேவன் முன்பே தமது தீர்க்கதரிசிகளின் மூலம் வேதாக மத்தில் தெரியப்படுத்திவிட்டார். ஆண்டவர் திரும்பவும் வருவார் என்ற திர்க்கதரிசனம் நாளை நடந்துவிட்டால் நாம் பரலோகத்தில் அவரோடுக்கூட இருப்போமா? நம்முடைய பிள்ளைகளை நாம் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறோமா?

**நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். -**பிலிப்பியர் 3: 20.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வானத்தை நோக்கி பார்க்க வேண்டும். முற்பிதாக்கள் யாவரும் அந்த வானத்தை நோக்கி பார்த்தார்கள்.

**ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்.**
**இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்.**
**தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே.**
-எபிரேயர் 11: 10, 13, 15.

இந்த பரலோக வாஞ்சையை பாருங்கள். நமக்காக கிறிஸ்து பரலோகத்திலே வாசஸ்தலத்தை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். அதிலே பொன் தகட்டால் கட்டப்பட்ட வீடாக ஆயத்தப்படுத்தியிருக்கிறார். இரத்தினகற்களாலே அலங்கரிக்கப்பட்ட வீடாக கட்டியிருக்கிறார். அந்த பரலோகத்திலே சாவு துக்கம் கண்ணீர் கிடையாது. அங்கு சாத்தானும் கிடையாது. இவைகளை பற்றி நாம் சிந்திக்கிறோமா? அதற்கேற்றபடி நாம் ஆயத்தமாயிருக்கிறோமா?

பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் வந்து வாசம் பண்ண நாம் அனுதினமும் ஜெபிக்கவேண்டும். தேவ ஆவியானவர் நம்மிடம் ஊற்றப் படும்போது பல பாஷைகள் பேசுவதற்காக அல்ல. நாம் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யவேண்டும் என்பதற்காகவுமல்ல, பின்பு என்னதான் செய்வார்?

**அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.** -யோவேல் 2: 28.

இவ்விதமான சிலாக்கியத்தை காண நாம் வாஞ்சையாக இருக்க வேண்டும்.

ஆகவே நமக்கு தூரப்பார்வை அவசியப்படுகிறது.

அடுத்து ஆடுகளுக்கு தன்னைதானே பாதுகாத்துக்கொள்ள தெரியாது. ஒரு ஆட்டை அடித்தீர்களென்றால் அது கோபமாக நம்மிடம் எதிர்த்து வராது. யாராவது அதை பாதுகாத்தால்தான் உண்டு. மனிதனும் தன்னைதான் பாதுகாத்து கொள்ளமுடியாது. பெரிய வீட்டை கட்டி பூட்டை போடுகிறார்கள்.

அந்த பூட்டை உடைத்து வீட்டிற்குள்ளே செல்ல திருடர்களால் முடியாத காரியமா? பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இருக்கிறதா? அவர்கள் பள்ளிக்கு போய் வீடு திரும்பும் மட்டும் நமக்கு நிம்மதி இருக்குமா? ரயில், விமானம், பஸ் பயணங்களில் நமக்கு



பாதுக்காப்பு இருக்கிறதா? பிசாசின் வல்லமைகளோடு நம்மால் எதிர்த்து நிற்கமுடியுமா? நம்முடைய அறிவு ஞானம் வல்லமையை வைத்துகொண்டு பிசாசுக்கு முன்பாக நம்மை பாதுகாத்துக்கொள்ளமுடியாது. நமக்கு ஒரு மேய்ப்பன் தேவை.

ஆண்டவருடைய ஒத்தாசை நமக்கு தேவைப்படுகிறது. அவர் மட்டுமே நம்மை பாதுகாக்கமுடியும். வரபோகிற காலம் மிகவும் கொடிதாயிருக்கும். கஷ்டமான காலங்கள் நமக்கு முன்னே ஆயத்தமாக நிற்கிறது. இனி இந்த உலகத்தில் பாதுகாப்பு இல்லை. கர்த்தர் மாத்திரம் நமக்கு பாதுகாவலாக இருக்கிறார்.

சங்கீத புத்தத்திலே 91-ஆம் அதிகாரத்தை நாம் மனதிலே வைத்துக்கொள்ளவேண்டும்.

**உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். அவர் உன்னை வேடனுடையகண்ணிக்கும், பாழாக்கும்கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய். எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக்காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்குஅவர்கள் உன்னைத்தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டுபோவார்கள். சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய். அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.** -சங்கீதம் 91.

**கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.** -சங். 34: 7.

நாம் அவரை சார்ந்திருந்தால் அவருடைய தேவதூதர்கள் நம்மை சுற்றி நிற்கிறார்கள். நாம் பின் வாங்கினோமென்றால் நம்மை விட்டு தேவதூதர்கள் போய்விடுவார்கள். அந்த நேரத்திலே பிசாசானவன் நம்மை சுற்றி வளைத்துகொள்வான். எல்லாவித துன்பங்களையும் கொடுத்துவிடுவான், இதற்காகவே நமக்கு ஆண்டவர் தேவைப்படுகிறார். தேவன் தாமே நம்மை பாதுகாத்து வழி நடத்தி செல்வாராக -ஆமென் .